பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 07 | புதன்கிழமை | 23.07.2025 | அதிர்வு 353

## பெண் ஒருவர் சுட்டுக்கொலை

### புத்தளத்தில் சம்பவம்

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளம், மாரவில - மரந்த பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் 06



# செம்மணியில் நேற்று மட்டும் எட்டு மனித எலும்புக்கூடுகள்

## அவற்றில் பல சிசுக்கள், சிறார்களுடையவை

## இதுவரை 80 என்புத் தொகுதிகள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின்போது சிசுக்களின் என்புத் தொகுதி மற்றும் சிறுவர்களின் என்புத் தொகுதிகள் எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதிகள் உட்பட 8 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன. இதன்படி செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 80 ஆக உயர்வடைந்துள்ளது. 02



# குழந்தைகளுக்குப் பாலூட்டும் போத்தலும் அடையாளம்

## வெள்ளை நிற ஆடை ஒன்றும் கண்டெடுப்பு



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி தடயவியல் அகழ்வாய்வுத் தளம் இரண்டிலிருந்து குழந்தைகளுக்குப் பாலூட்டும் போத்தலை ஒத்த பொருள் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிக்கு அருகில் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் 06




நாட்டில் மிக மோசமாகத் தலைவிரித்தாடிய ஊழல், மோசடி, முறைகேடுகள், தவறான ஆளுகை நடவடிக்கைகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி, குற்றம் இழைத்தவர்களை தண்டிப்பது தொடர்பில் இரண்டு சட்டங்கள் அண்மைக்காலத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இவற்றில் ஒன்று – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

மற்றது –ரணிலின் காலத்தில் தயாரிக்கப்பட்டு, இப்போதைய அரசின் காலத்தில் நிறைவேற்றப்பட்டு, சட்டமாகி இருப்பது.

முதலாவது – 2023 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டமாகும்.

மற்றது – 2025ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க குற்றம் மூலம் கிடைக்கும் வருவாயை மீட்கும் சட்டம்.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மீது இந்த இரண்டு சட்டங்களும் பாய்ந்தமையால் அவர் குடும்பத்தோடு நெருக்கடி 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



## செம்மணியில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 17ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின்போது சிசுக்களின் என்புத் தொகுதி மற்றும் சிறுவர்களின் என்புத் தொகுதிகள் எனச் சந்தேகிக்கப்படும் 6 – 7 வரையான என்புத் தொகுதிகள் உட்பட மொத்தமாக 8 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 80 மனித என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 65 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் எஸ்.லெனின்குமாரின் கண்காணிப்பில் துறைசார் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் நேற்று இடம்பெற்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர் ஆகியோரும் நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி இருந்தனர்.

அதேவேளை, நேற்றைய அகழ்வுப் பணிகளை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரகுராம், தொல்லியல் துறை விரிவுரையாளர் ஆகியோர் நேரில் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.













# முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை நீக்கும் சட்டமூலத்துக்கு அமைச்சரவை அனுமதி

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகளை ரத்து செய்யும் வகையில், ஜனாதிபதியின் உரிமைகள் சட்டத்தை ரத்து செய்வதற்கான சட்டமூல வரைவுக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இந்த நடவடிக்கை "வளமான நாடு – அழகான வாழ்க்கை" எனும் அரசாங்க கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது அரசின் செலவினங்களைக் குறைத்து பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கு உறுதியளிக்கிறது.

அதன்படி, 1986 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஜனாதிபதியின் உரித்துக்கள் சட்டத்தை நீக்குவதற்காக சட்டமூலமொன்றை

தயாரிப்பதற்காக கடந்த ஜூன் மாதம் 16 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த பணிகளுக்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் உரித்துக்கள் (நீக்கல்) சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதற்கமைய, மேற்படி சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# வவுணதீவில் இரு பொலிஸார் படுகொலை விடயத்தில் விசாரணையைத் திசை திருப்பிய இன்ஸ்பெக்டர் கைது

## குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை

(கனகராசா சரவணன்)

வவுணதீவு வலையிறவுப் பாலத்துக்கு அருகாமையில் இரு பொலிஸாரைத் துப்பாக்கியால் சுட்டும் வெட்டியும் கொலை செய்த சம்பவம் தொடர்பில் பிழையான தகவலை வழங்கி விசாரணையைத் திசை திருப்பியமை தொடபில், அப்போது மட்டு. மாவட்ட புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவரும் தற்போது கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருபவருமான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பில் வைத்துக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது பற்றி தெரியவருவதாவது:-

கடந்த 2018 நவம்பர் 29 ஆம் திகதி வவுணதீவு வலையிறவு பொலிஸ் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருந்த பொலிஸ் சார்ஜண்ட் நிரோசன் இந்திரப் பிரசன்னா மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் டினேஸ் ஆகியோரை இனந் தெரியாதோர் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும் கொலை செய்து அவர்களின் துப்பாக்கிகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னர் விடுதலைப் புலிகளில் இருந்து புனர்வாழ்வு பெற்று வெளிவந்த வவுணதீவு கரையாக்கன்தீவுப் பகுதியைச் சேர்ந்த அஜந்தன் என்பவர் பாவித்து வந்த ஜக்கட் பாலத்தின் கீழ் வீசி எறிந்து கிடப்பதாகவும், அவர் இந்தப் படுகொலையை செய்தார் எனவும் அரச மற்றும் புலனாய்வு பிரிவினர் அறிக்கையிட்டமையை அடுத்து அவரை 2018 நவம்பர் 30 ஆம் திகதி பொலிஸார் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பிலுள்ள சி.ஐ.டியின் நான்காம் மாடியில் தடுத்துவைக்கப்பட்டார். இந்நிலையில், 2019 ஏப்பிரல் 21 உயித்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியான ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் ஸாரானின் குழுவைச் சேர்ந்த கபூர் மாமா என அழைக்கப்படும் ஸாரானின் சாரதியான முகமது ஆதம்லெப்பை, மில்ஹான், பிறதோஸ், நில்காம் ஆகிய 4 பேரைக் கைது செய்ததன் பின்னர் அவர்கள்தான் இந்த படுகொலையை செய்துள்ளனர் எனத் தெரிய வந்ததாகக் கூறப்படுகின்றது. அதனையடுத்து கைது செய்யப்பட்ட முன்னாள் பேராளியை விடுதலை செய்தனர்.

இதன் பின்னர் தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றியதையடுத்து இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மீண்டும் முன்னெடுத்த நிலையில், மேற்படி இரு பொலிஸார் படுகொலைச் சம்பவத்தின் உண்மை விடயங்களை மூடிமறைத்து, அந்தக் குற்றம் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி மீது வேண்டுமென்றே சுமத்தப்பட்டமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பாக அப்போது மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியாக கடமையாற்றிவரும், தற்போது கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருபவருமான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்புக்கு விசாரணைக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அழைத்தனர். விசாரணையின் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த ஏப்பிரல் 8ஆம் திகதி மட்டக்களப்பு கரடியனாறு தேசிய புலனாய்வு சேவை பிரிவில் கடமையாற்றிவரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு வரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடதக்கது.

# தையிட்டி விகாரைக் காணியை விட்டு உடன் வெளியேறுமாறு விகாராதிபதிக்குக் கடிதம்

**(ந.லோகதயாளன்)**

விகாரையின் பெயரில் ஆக்கிரமிக்கப்பட்ட காணியில் இருந்து உடனடியாக வெளியேறுமாறும், தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தையிட்டி விகாரையின் விகாராதிபதிக்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

”தையிட்டியில் உள்ள தனது காணியில் அடாத்தாகச் சட்டவிரோதக் கட்டடம் ஒன்றை அமைத்து வருவதாக எமக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ள காணியில், தங்களுக்குச் சட்ட ரீதியான உரித்துக் காணப்பட்டால், அவற்றுக்கான ஆவணங்களைப் பிரதேச சபையில் சமர்ப்பிக்கவும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் உடனடியாக அந்தக் காணியில் இருந்து வெளியேற வேண்டும். தவறின் தங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்று தையிட்டி விகாராதிபதி ஜிந்தோட்ட நந்தரமா தேரருக்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.






# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் 67,147 மில்லியன் டொலர் வருவாய்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம், கடந்த 10 ஆண்டுகளில், இலங்கைக்கு 67,147 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளதாக வெளிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு மே மாதம் வரையான காலப்பகுதியிலேயே, இந்த தொகை கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில், வாய்மொழி கேள்வி பதிலுக்கான நேரத்தின்போது, இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளை மேற்கோள் காட்டி பிரதி அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதனிடையே, 2025ஆம் ஆண்டு பெப்ரவரி 25ஆம் திகதி நிலவரப்படி, வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 13 லட்சத்து 45 ஆயிரத்து 801 எனவும் வெளிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.



# உங்கள் தந்தை எத்தனை பேரை வேட்டையாடினார்? வாய் கொடுத்து வாங்கிக்கட்டிக்கொள்ள வேண்டாம்

## நாமல் எம்.பிக்கு பிரதி அமைச்சர் ஜயசிங்ஹ நெத்தியடி

"உங்கள் தந்தை எத்தனை பேரை வேட்டையாடினார்? உங்களை எதிர்ப்பவர்களை இருக்கவிட்டீர்களா? ஆகவே, எம்மிடம் வாய் கொடுத்து வாங்கிக்கட்டிக்கொள்ள வேண்டாம்."

– இவ்வாறு தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்ஹ, நாமல் ராஜபக்ஷ எம்.பியை எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேலையாட்களின் வரவு – செலவுத் திட்ட நிவாரணப்படி திருத்தச் சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதனத் திருத்தச் சட்டமூலம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில் தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்ஹ உரையாற்றிக்கொண்டிருந்தபோது இராதாகிருஷ்ணன் எம்.பி ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். ஆனால், அதனைப் பெரிதாகச் செவிமடுக்காத தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்ஹ, "எதிராளிகளாக இருந்த சஜித் பிரேமதாஸ, நாமல் ராஜபக்ஷ, தயாசிறி ஜயசேகர நீங்கள் எல்லோரும் கொழும்பு மாநகர சபை ஆட்சியைக் கைப்பற்ற ஒன்றிணைந்தீர்கள். ஊடக சந்திப்புகளை நடத்தினீர்கள். எதிர்கால நண்பர்களானீர்கள்." – என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நாமல் ராஜபக்ஷ எம்.பி., "ஏன் நீங்களும் எமது நண்பர்தானே." – என்றார்.

இதனால் கோபமடைந்த தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்ஹ, "நீங்கள் நல்லவர்களா? தாஜுதீனைக் கொலை செய்தீர்கள். படுகொலையாளிகளை, வெள்ளை வான் கடத்தல்காரர்களைப் பாதுகாத்தீர்கள். உங்கள் தந்தை எத்தனை பேரை வேட்டையாடினார். சரத் பொன்சேகாவை என்ன செய்தீர்கள்? உங்களை எதிர்ப்பவர்களை இருக்கவிட்டீர்களா? ஆகவே, எம்மிடம் வாய் கொடுத்து வாங்கிக்கட்டிக்கொள்ள வேண்டாம்." – என்று பதிலடி வழங்கினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
களை எதிர்கொண்டு நிற்கின்றார்.

இந்த விடயத்தில் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக ஊழல் தடுப்பு ஆணையகத்திடம் முறைப்பாடு செய்த தென்னிலங்கைப் பிரமுகர் ஒருவர், இப்போது தனது கவனத்தை வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது திருப்பி இருக்கின்றார் என்று தெரிகின்றது. அந்த வடக்கு நாடாளுமன்ற உறுப்பினருக்கு உள்ள சொத்துக்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வளமுள்ள விவகாரங்கள் தொடர்பில் அந்தத் தென்னிலங்கை நபர் விடயங்களை சேகரித்து வருகின்றார். இந்த வாரத்தில் – அதாவது அடுத்த ஓரிரு தினங்களில் – அந்த வடக்கு எம்.பிக்கு எதிராக ஊழல், மோசடி தடுப்புப் பிரிவிடம் அவர் முறையிட இருக்கின்றார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அந்த வடக்கு எம்.பி. சுப்பர் மார்க்கெட், குளிர்களி நிலையம் போன்ற சொத்துக்களையும், வீடு வாசல்களையும், அண்மைக்காலத்தில் கணிசமாக சுவீகரித்திருக்கின்றார் என்று கூறும் முறைப்பாட்டாளர், அது பற்றிய விவரங்களுடன் ஊழல், மோசடி தடுப்பு பிரிவை இவ்வாரம் தாம் அணுகுவார் எனக் கூறுகின்றார்.

பிறக்கும் ஓகஸ்ட் மாதத்தில் பல திருவிழாக்கள் இனி இடம்பெறலாம் என எதிர்பார்க்க முடியும்.

* * *

'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' – என்பார்கள்.

இதுவரை காலமும் பொலிஸ்மா அதிபராக இருந்த தேசபந்து தென்னக்கோனின் நிலைமை அப்படித்தான் தெரிகிறது.

ஏற்கனவே நாடாளுமன்றத்தினால் அவருக்கு எதிராக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு உரிய விசாரணைகளை நடத்தி தேசபந்து தென்னக்கோன் குற்றவாளி என முடிவு செய்து, அது தொடர்பான அறிக்கையை சபாநாயகருக்கு அனுப்பி விட்டது. நாடாளுமன்றம் அந்த அறிக்கை மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பை அடுத்து, தேசபந்து தென்னக்கோனைப் பதவியில் இருந்து வெளியேற்றுவதற்கான பிரேரணையை வரும் வாரங்களில் உரிய முறையில் நிறைவேற்றி கருமத்தை நடைமுறைப்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இதற்கிடையில் மற்றொரு முனையிலும் தேசபந்து தென்னக்கோன் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றார்.

2022 மே 9ஆம் திகதி அப்போது பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் அலரி மாளிகை இல்லத்தில் கூட்டத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்த நபர்கள், அச்சமயம் அருகில் காலி முகத்திடலில் அறகலய போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோரைத் தாக்கித் துரத்தும் நடவடிக்கையை எடுத்தனர். அந்தச் சம்பவத்தில் – அந்தக் குற்றங்களில் – அங்கு பிரசன்னமாகி இருந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னைக்கோனுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்து, அது தொடர்பான வழக்கில் அவரையும் குற்றவாளியாகச் சேர்த்துக் கொள்ளும்படி சட்டமா அதிபர் திணைக்களம் பொலிஸாருக்குப் பரிந்துரை வழங்கியிருந்தது.

இந்த நடவடிக்கைக்கு எதிராக தேசபந்து தென்னைக்கோன் சார்பில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டதை அடுத்து, மேற்படி அறகலய போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் தேசபந்து தென்னக்கோனை ஒரு குற்றவாளியாகச் சேர்க்கும் சட்டமா அதிபரின் முடிவை இடைநிறுத்தி – தடை செய்து – மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருந்தது.

அந்த உத்தரவை உயர் நீதிமன்றம் விசாரணையின் பின்னர் நேற்று ரத்து செய்துள்ளது. அதன்படி மேற்படி அறகலயப் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறை தாக்குதல் விவகாரத்தில் தேசபந்து தென்னக்கோனும் ஒரு குற்றவாளியாகச் சேர்க்கப்படுவார். அதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடை உயர்நீதிமன்றத்தினால் இப்போது ரத்து செய்யப்பட்டிருக்கின்றது.

ஆக, தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான சட்டச்சூழ்நிலை அவரது கழுத்தை இறுக்கும் நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

## பெண் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இடம்பெற்றுள்ளது.

வீட்டின் முன்னால் இருந்த பெண்ணே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு இடம்பெற்ற நேரத்தில் அவருக்கு அருகில் இருந்த பத்து வயதான பிள்ளையும் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

TNPF
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
TAMIL NATIONAL PEOPLE'S FRONT

முன்னணியின் ஏற்பாட்டில்

## யாழில் இன்று கறுப்பு ஜூலை நினைவேந்தல்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை அரசால் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட கறுப்பு ஜூலை 1983 படுகொலையின் 42 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ். நகர முனியப்பர் கோவிலடியில் இன்று மாலை 5 மணியளவில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரி முன்னெடுக்கப்படும் இந்த நினைவேந்தல் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

## குழந்தைகளுக்குப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்து.

அந்தப் பகுதிகள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடயவியல் அகழ்வாராய்ச்சித் தளம் இரண்டாக அறிவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியாளர்களின் உதவியோடு அகழ்வுப் பணிகள் கடந்த ஜூலை மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகின.

அங்கு நேற்று அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற நிலையில் குழந்தைகளுக்குப் பாலூட்டும் போத்தலை ஒத்த பொருள் ஒன்றும், வெள்ளை நிற ஆடை ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இன்றைய அகழ்வின் பின்னரே இது தொடர்பான மேலதிக தகவல்கள் கிடைக்கப் பெறும்.





# மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோயில் 8ஆம் நாள் உற்சவமான பாம்புத் திருவிழா

மாமுனை ஸ்ரீநாகதம்பிரான் திருக்கோயில் சாந்திக அலங்கார உற்சவப் பெருவிழாவின் 8ம் நாள் உற்சவமான பாம்புத் திருவிழா நா.குணசீலன் குடும்பத்தாரின் உபயமாக கடந்த திங்கட்கிழமை சிறப்புற இடம்பெற்றுள்ளது.









# மரண அறிவித்தல்

மலர்வு
04
-
03
-
1951



உதிர்வு
20
-
07
-
2025

## Dr.கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன்

(Chairman of Masterfeeds Pvt Ltd and Vethouse Pvt Ltd,
Past President of Rotary Club Colombo Midtown, Longstanding Past
President of Kokuvil Hindu College OSA, Colombo & Revered member of the
Chinmaya Mission - Sri Lanka)

அன்னார் விஜயலக்ஷ்மியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி கணபதிப்பிள்ளை (கொக்குவில்) மற்றும் சீதாலக்ஷ்மி கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா பரநிரூபசிங்கம் (கொக்குவில்) மங்கையற்கரசி பரநிரூபசிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான லீலாவதி - செல்வரத்தினம், சரோஜினிதேவி - பஞ்சாட்சரம், புஷ்பாவதி - ஸ்ரீ சடாச்சரம் மற்றும் கணபதிப்பிள்ளை குமரேசன் அவர்களது அன்புச் சகோதரரும், பிருந்தா, ஆர்த்திகா மற்றும் ராகுலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சித்தார்த், பவேஷ் மற்றும் ஸ்ரீ வித்யா ஆகியோரின் மாமனாரும், மியா, காரா ஆகியோரின் அன்புப் பேரனும் சியாமினி, சியாமதி, சியாமீரா ஆகியோரின் அச்சா மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோலாலம்பூரில் 24.07.2025 வியாழக்கிழமையன்று முற்பகல் 9 மணி தொடக்கம் 10.30 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை கிரியைகள் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இறுதிக்கிரியைகள் நடைபெறும் இடம்:**

Pertubuhan Perkuburan India
Wilayah Persekutuan
3161 Jalan 2/489
Bandar Barusentul,
Kuala Lumpur, 51000, Malaysia

**தொடர்புகளுக்கு:**

பிருந்தா (மலேசியா): + 60 11 1233 9169
ஆர்த்திகா (UK): + 44 7565 498299

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆடிக் கலவரத் திருப்புமுனை

ஈழத் தமிழினத்தின் ஆன்மாவில் நீங்காத வடுவாக - பெரும் ரணமாக - ஆழக் காயத்தை ஏற்படுத்திய கறுப்பு ஜூலைக் கொடூரங்களின் நினைவழியா நாள்கள் இன்று முதல், இந்த வாரம் முழுதும் அனுஷ்டிக்கப்பட இருக்கின்றன.

1983 ஜூலைக் கலவரங்களின் 42 ஆவது வருட நிறைவிலே இப்போது நாம் இருக்கிறோம்.

அந்த ஆண்டில் இதே ஜூலை 23ஆம் திகதி நள்ளிரவுக்குச் சற்று முன்னர், யாழ்ப்பாணம், திருநெல்வேலி, பலாலி வீதியில் படையினரின் இராணுவ ஜீப் மற்றும் டிரக் மீது புலிகள் பதுங்கி இருந்து நடத்திய தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டனர். அதை அடுத்து இலங்கை முழுவதும் தமிழர்களுக்கு எதிரான வன்முறைக் கொடூரம் திட்டமிட்ட முறையில் பெரும் எடுப்பில் கட்டவிழ்த்து விடப்பட்டது.

இரத்தப் பிரளயமாக வெடித்த இந்தக் கலவரத்தில் தலைநகர் கொழும்பிலும், தென் இலங்கையின் பிற நகரங்களிலும் பேரினவாதிகளின் தாக்குதல் வெறியாட்டம் மிக மோசமாக - குரூரமாக - வெளிப்பட்டது.

தமிழர் மரணமும் தமிழர்களின் சொத்துக்கள் அழிப்பும் கட்டுக்கடங்காமல் தலைவிரித்தாடின. பாதுகாப்பற்றிருந்த சுமார் மூவாயிரம் தமிழர்கள் காட்டுமிராண்டித்தனமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள். பல இடங்களில் சிங்களக் காடையர் கும்பல்கள் தமிழர்களைக் கண்டதுண்டமாக வெட்டிச் சரித்தனர். பல தமிழ்க் குடும்பங்கள் உயிரோடு எரிக்கப்பட்டன. வீடுகள், கடைகள், கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், கைத்தொழில் வளாகங்கள், சினிமாத் திரையரங்குகள், எரிபொருள் நிலையங்கள் எனத் தமிழருக்குச் சொந்தமான சொத்துக்கள் பெருமளவில் தீக்கிரையாக்கப்பட்டன. கொழும்பு நகரில் மட்டும் ஒன்றரை லட்சம் தமிழர்கள் ஓர் இரவில் வீடு வாசல்களை இழந்து, அகதிகளாகி, நிர்க்கதி நிலைக்குச் சென்றனர்.

இந்த ஆடிக் கலவரம் கண்மூடித்தனமாகவோ, தறிகெட்டோ நடக்கவில்லை. தாக்குதல்கள் நன்கு திட்டமிட்டு, நெறிப்படுத்தப்பட்டவையாக - ஆட்சித் தரப்பின் வழிப்படுத்தலில் முன்னெடுக்கப்பட்டவையாக - அமைந்தன என்பதே பார்வையாளர்களின் கருத்தாக உள்ளது.

கொழும்பில் மட்டும் பல நூற்றுக் கணக்கான தமிழர்களின் தொழிற்சாலைகளும், வர்த்தக நிலையங்களும், பெரும் முதலீடுகளும் சாம்பல் மேடாக்கப்பட்டன.

தமிழர்களின் உயிரையும் பொருளாதார அடித்தளத்தையும் நாசம் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு இந்த பேரினவாத கொடூரம் ஆறு நாள்களாக அரங்கேறியது.

இச்சமயத்தில் தான் வெலிக்கடையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 53 க்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் சிறைக்குள்ளேயே கண்டதுண்டமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த ஆடிக் கலவர கொடூரங்களே தமிழினத்தின் மத்தியில் தமிழ்த் தேசிய உணர்வை மடைவாயை உடைத்து ஓடிய பெருவெள்ளம் போல பிரவாகம் எடுக்கச் செய்தது. நாடுகளின் எல்லைகளைக் கடந்து இன உணர்வு ஈழத் தமிழர்கள் அனைவரையும் பற்றிக் கொள்ள வைத்தது. தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரத்தைப் பார்த்து கொதித்தெழுந்த தமிழ் இளம் சமூகம் பல்லாயிரக்கணக்கில் அணி அணியாக தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்தனர்.

ஒரு வகையில் பார்த்தால் இந்த இனக் கலவரம் மூலம் சிங்கள இனவாத சக்திகள் தமிழ்த் தேசிய உணர்வெழுச்சிக்கான உத்வேகத்தைத் தூண்டி விட்டனர். தனியரசுப் போராட்டத்திற்கான அகப் புறச் சூழ்நிலைகளை அவர்களே உருவாக்கிக் கொடுத்தனர் என்பதுதான் இந்த கலவரங்களின் பெறுபேறாக அமைந்தன. தமிழ் மக்களின் அரசியல் செல்நெறியை மாற்றி அமைத்த முக்கிய திருப்புமுனையாக இந்த ஜூலை கலவரம் அமைந்தது.



# தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் நல்லூரான் வழிபாட்டுக் காலத்தைப் பேணுங்கள்

**அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் வேண்டுகோள்**



தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் வழிபாட்டுக் காலத்தை பேணுமாறும் புனிதமான திருவீதியில் எவரும் மறந்தும் பாதணிகளை அணிந்து செல்லாது புனித்த்தை பேணுமாறும் காலாநிதி ஆறுதுருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லூர் திருவிழா காலம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் இந்த வேண்டுகோளைவிடுத் துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நல்லூரானின் பெருந்திருவிழாவை முன்னிட்டு நாம் ஆயத்தமாவோம்.

ஈழத்திருநாட்டின் ஈடுஇணையற்ற பெருங்கோவிலாக விளங்குவது நல்லூர்க் கந்தசுவாமி கோவில். இத்திருக் கோவிலின் வருடாந்த பெருந்திருவிழா இம்மாதம் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற உள்ளது.

பல லட்சம் மக்கள் நல்லூர் வீதியில் முருகனைக் காண ஒன்று கூடப் போகிறார்கள். வடக்கில் உள்ள மக்கள் இந்த வாரமே தங்கள் வீடுகளைப் புனிதப்படுத்தி நல்லூரான் திருவிழாவிற்காக தங்கள் வசிப்பிடத்தையும் புனிதப்படுத்தத் தொடங்கியிருப்பார்கள். நல்லூர் சுற்றாடல் தெய்வீகக் களை கட்டத் தொடங்கிவிடும். தண்ணீர்ப்பந்தல்கள் அமைக்கும் வேலைகள் ஆரவாரமாக தொடங்கிவிடும். அழகன் முருகன் திருவீதியில் அரோகரா சத்தம் இருபத்தைந்து நாள்களும் ஓங்கி ஒலிக்கும். வீதியெல்லாம் புதிய மணல்பரப்பி அங்கப் பிரதிஷ்டை மற்றும் அடியடித்துக் கும்பிடும் அடியவர்க்கு வசதிகள் செய்வார்கள். தெய்வீகச் சூழலாக மாறும் நல்லூர்ச் சுற்றாடலின் சிறப்பு எழுத்தில் வடித்துவிடமுடியாதது.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தை உருவாக்கி பரம்பரை பரம்பரையாக காத்துவரும் மாப்பாணர் பரம்பரைக்கு சைவ உலகம் என்றும் நன்றிக்கடன் பட்டது. போரில் அழிந்த சைவத் தமிழர்களின் திருக்கோவிலைத் தமது சொந்த நிலத்தில் தமது குடும்பத்தின் முயற்சியால் உருவாக்கி கடந்த மூன்று நூற்றாண்டுகள் உன்னதமாக கட்டிக்காத்து வரும் மாப்பாணர் குடும்பத்தின் மகத்துவத்தை எல்லோரும் நன்கு அறிவர்.

திசைகள் தோறும் கோபுரங்கள் உள்வீதி முழுவதும் உவமை இல்லா அழகுக் காட்சிகள் உருவாக்கி உலகம் வியக்க வைக்கும் நல்லூரான் தனித்துவத்தை எவரும் குறைத்து மதித்து விடமுடியாது. சர்வதேசமே நல்லூர்ச் சிறப்பை வியந்து போற்றுகிது. அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனம் வெளியிட்டு வரும் நூலில் உலகம் முழுவதும் வாழும் சைவ மக்கள் சீரிய ஒழுங்கைப் பின்பற்றுவதற்கு நல்லூரைத் தரிசியுங்கள் என அறிவுறுத்தல் கூறியுள்ளார்கள்.

இந்திய மத்திய அரசின் நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் "அப்பப்பா என்ன அதிசயம்? நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குள் கால் எடுத்து வைத்தவுடன் எம்மை மறந்து விடுகிறோம். ரம்மியமான இத்திருக்கோவில் சிறப்புப்பற்றி உலகமே வியக்கிறது!" என உரைத்தமை அனைவரும் அறிவர்.

அன்பர்களே! நல்லூர்ப் பெருந்திருவிழாக் காலங்களில் குடும்பம் குடும்பமாக சென்று வழிபாடு செய்வதற்கு ஆயத்தமாகுங்கள். தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் வழிபாட்டுக் காலத்தை பேணுங்கள். புனிதமான திருவீதியில் எவரும் மறந்தும் பாதணிகளை அணியாதீர்கள். விசேட தேவையுடையவர்கள் வழிபாடு செய்ய வரும்போது தொண்டர்கள் உதவுங்கள். சுற்றுச்சூழலில் வசிப்பவர்கள் ஆன்மீக அலங்காரங்களை தாம் வசிக்கும் இடங்களில் ஏற்படுத்துங்கள். படம்பிடித்து முருகனை தேடுவதைவிட பக்தியோடு அவனை அகத்தால் உள்வாங்குங்கள். வீதியில் சுவாமி புறப்பட்டால் வேடிக்கைக்கு இடமில்லை, வேலனிடம் விடிவு கேட்டுப் பிரார்த்திப்பதே எமக்கு வேலை என உணருங்கள். சஞ்சலமின்றி இறைவன் எமக்குத் தந்த இந்த இனிய நாள்களை ஆனந்தமாகக் கழிப்பதற்கு ஆயத்தமாகுங்கள். அலங்காரக் கந்தனை தரிசிக்க வரும் அடியவர்களாகிய நாம் எளிமையாக நின்று வணங்குவோம்.

எமது அடுத்த தலைமுறைக்கு எடுத்துக் காட்டாக வழிபாட்டு மரபை முன்னெடுத்துச் செல்வோம். எல்லோரும் நல்லூரான் பெருவிழாவைக் கண்ணாரக் காண்போம். - என்றுள்ளது.



# ஹிங்குரானை பிரதேச கரும்புச் செய்கையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கொழும்பில் சந்திப்புகள்

அம்பாறை மாவட்டத்தில், ஹிங்குரானை சீனித் தொழிற்சாலைக்குட்பட்ட வலயங்களில் கரும்புச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்காக, அங்குள்ள கரும்பு உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சந்தித்து உரையாடினர்.

அதனையடுத்து, அந்தச் சங்கங்களின் பிரதிநிதிகள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமின் நெறிப்படுத்தலில், கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தியுடனும் அவரது நாடாளுமன்ற அலுவலகத்தில் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இவ்விவகாரத்துக்கு கூடிய விரைவில் உரிய தீர்வு வழங்கப்படும் எனவும், அதையிட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி உறுதியளித்துள்ளார்.

இந்த சந்திப்பில்,கிராமிய அபிவிருத்தி பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ,அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். உதுமாலெப்பை, எம்.எஸ். வாசித், மஞ்சுள ரத்நாயக்க ஆகியோரும் பங்குபற்றினர்.














# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி 8 மாவட்டங்களிலும் நடப்படும் விடுதலை விருட்சங்கள்

## அவற்றுக்கான விடுதலை நீர் சேகரிக்கும் பணி ஆரம்பம்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையில் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் நடப்படவுள்ள விடுதலை விருட்சத்திற்கான நீர் சேகரிக்கும் வாகன பவனி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இருந்து ஆரம்பித்திருக்கிறது.

"குரலற்றவர்களின் குரல்" அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையிலான அணி திரள் நிகழ்வு எதிர்வரும் 24ஆம், 25 ஆம் திகதிகளில் நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடைபெறவுள்ளது. அந்த நிகழ்வின் முக்கிய அங்கமாக விடுதலை விருட்சம் நடப்பட உள்ளது. எத விடுதலை விருட்சத்திற்கான நீர் சேகரிப்பு தாயக பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தன்னார்வலர்கள் மற்றும் பொது அமைப்புகள் உங்கள் பிரதேசங்களில் விடுதலை விருட்சத்திற்கான நீரைச் சேகரித்து கிட்டு பூங்காவில் இடம் பெறும் விடுதலை நிகழ்வில் கையளிக்க முடியும். மேலும் தங்கள் பிரதேசத்துக்கு வரும் நீர் சேகரிக்கும் வாகனத்திலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை முன்னிறுத்தி ஒரு குவளை நீரை நீங்களும் வழங்க முடியும் என "குரலற்றவர்களின் குரல்" அமைப்பினர் தெரிவித்திருக்கின்றனர்.














# மலையகத்தில் சீரற்ற வானிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

**(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)**

மலையகத்தில் தொடரும் சீர்ரற்ற காலைநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது

தொடர்ந்து காற்றுடன் கூடிய கனமழையால் லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெயாபீல்ட் தோட்டத்தில் நேற்று முன்தினம் மாலை குடியிருப்பு பின்புறத்தில் உள்ள மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒரு குடியிருப்பில் சமையலறை முற்றாக மண்ணினால் மூடப்பட்டு சேதமாகியுள்ளது.

இதன்போது வீட்டில் இருந்த அனைத்துப் பொருள்களும் மற்றும் நீர் தாங்கிகள், மலசல கூடம் அனைத்து மண்ணினால் மூடப்பட்டுளளன. தெய்வாதீனமாக உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை. அத்தோடு அப்பகுதியில் தொடர்ந்து மண்சரிவு ஏற்படக் கூடிய ஆபத்தான நிலை காணப்படுகின்றது.

இதேவேளை மலையகத்தில் தொடரும் மழை காரணமாக குளிருடன் கூடிய காலநிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கைத்துப்பாக்கியுடன் 2 பேர் தெமட்டகொடையில் கைது!

கொழும்பு, தெமட்டகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேலுவன வீதி பகுதியில் கைத்துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் இளைஞர் உட்பட இருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் விசாரணைப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே கைத்துப்பாக்கி மற்றும் 12 தோட்டாக்களுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கைத்துப்பாக்கியைத் தம்வசம் வைத்திருக்க உதவி செய்த குற்றச்சாட்டில் மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.



கைது செய்யப்பட்ட இருவரும் தெமட்டகொடை பகுதியில் வசிக்கும் 24 மற்றும் 42 வயதுடையவர்கள் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# அ.தி.மு.க. கூட்டணிக்கு அழைப்பு; பதில் வழங்கிய விஜய்யின் த.வெ.க.





எங்கள் கூட்டணியில் யாரைச் சேர்ப்பது, யாரைத் தவிர்ப்பது என்பதை நாங்கள்தான் முடிவு செய்வோம் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் அழைப்புக்கு தமிழக வெற்றிக் கழகம் கட்சி பதில் அளித்துள்ளது.

இது குறித்து, த.வெ.க. கொள்கைப் பரப்புப் பொதுச்செயலாளர் அருண்ராஜ் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது,

"எங்களுடைய முதல்வர் வேட்பாளர் த.வெ.க. தலைவர் விஜய்தான் என்பதை செயற்குழுவில் தீர்மானமாக நிறைவேற்றி விட்டோம். எங்கள் கூட்டணியில் யாரைச் சேர்ப்பது, யாரைத் தவிர்ப்பது என்பதை நாங்கள்தான் முடிவு செய்வோம். டிசம்பருக்கு பிறகுதான் அதுகுறித்து முடிவு எடுப்போம்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி குழப்பமான மனநிலையில் உள்ளார். தங்களுடைய கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களிடையே தன்னை பெரும் தலைவர் என்றும், நல்ல கூட்டணியை உருவாக்கி விடுவேன் என்ற தோற்றத்தையும் கட்டமைக்கவே இதுபோல் தவறான கருத்தைக் கூறி வருகிறார். மேலும், அ.தி.மு.க - பா.ஜ.க. கூட்டணி மக்கள் மத்தியில் எடுபடாது என்பதாலேயே பிரம்மாண்ட கட்சி எங்கள் கூட்டணிக்கு வர உள்ளது என்றும் கூறுகிறார். இதுவரை யாரிடமும் நாங்கள் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. எங்கள் முதல்வர் வேட்பாளர் விஜய்தான்." என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி அளித்த பேட்டி ஒன்றில், "தி.மு.கவை தோற்கடிக்க ஒருமித்த எண்ணம் கொண்ட அனைத்து கட்சிகளும் அ.தி.மு.கவுடன் கைகோக்க வேண்டும். இது விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் மற்றும் சீமானின் நாம் தமிழர் கட்சிக்கும் பொருந்தும்" என்று கூறியிருந்தார்.

# தீமைக்கு மாற்று தீமை கிடையாது; பழனிசாமியை நிராகரித்தார் சீமான்





தீமைக்கு மாற்று தீமை கிடையாது எனக்கூறி, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் அழைப்பை நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நிராகரித்துள்ளார்.

விழுப்புரத்தில் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"பா.ஜ.கவை வீழ்த்த வேண்டும் எனக் கூறி ஓர் அணியும், தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வரக் கூடாது என மற்றொரு அணியும் உள்ளது. அவர்கள் ஓரணி என்கின்றனர். நாங்கள் மட்டுமே ஓரே அணியாக உள்ளோம். தி.மு.கவை வீழ்த்த அ.தி.மு.க. அழைப்பு என்பது தீமைக்கு மாற்று தீமை கிடையாது. நெருப்பை, நெருப்பை வைத்து அணைப்பது கடினம். தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள், தேசிய கட்சிகளின் தேவையை ஏன் ஏற்படுத்துகின்றனர். மக்களின் தேவையை அதிகாரத்தில் இருந்தவர்கள் நிறைவேற்றி இருந்தால், தமிழக மண்ணுக்கு தேசிய கட்சிகள் வரவேண்டிய, வளர வேண்டிய நிலை ஏன் உருவாகிறது?

காவிரியில் இருந்து தமிழகத்துக்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்க முடியாது என சொல்கிறது காங்கிரஸ், பா.ஜ.க.. முல்லைப் பெரியாறு நதி நீரை பெறவும் காங்கிரஸ் தடையாக உள்ளது. தமிழகத்தின் மண், நிலம், காடு, மலை, கடல் ஆகியவற்றை பாதுகாக்க தேசிய கட்சிகள் துணை நிற்காது. திராவிட கட்சிகளும் கூட நிற்காது. மீண்டும் 27 ஆயிரம் ஏக்கரை என்.எல்.சி. கைப்பற்ற போகிறது. மன்னார்குடி வரை தோண்டிக் கொண்டு செல்வர். போருக்கு பிறகு கூட, அந்த இடத்தில் மக்களை மறு குடியேற்றம் செய்து விடலாம். ஆனால் நிலக்கரி, மீத்தேன், அணு உலை வெடித்த இடத்தில் மக்களை மறு குடியேற்றம் செய்ய முடியாது. நிலமற்ற அடிமைகளாக தமிழர்களை மாற்றி விடுவர். இதற்காக தேசிய மற்றும் திராவிட கட்சிகள் போராடாது.

நான் இருக்கும் வரை பா.ஜ.க. வெல்லாது, வளராது. இதுபோல் வேறு யாராவது சொல்வார்களா? பா.ஜ.க. வந்துவிடும் என குடுகுடுப்பைக்காரர்கள் போல் கூறுகின்றனர். பா.ஜ.கவுக்கு நான் 'பி' அணி என்றால், தி.மு.க 'ஏ' அணி. தமிழகத்தில் பெரிய கூட்டணி என் கூட்டணிதான். 8 மாதம் பொறுத்திருக்கவும். அதுபற்றி மாநாட்டில் அறிவிக்கப்படும். முதல்வர் விரைவாக குணமடைய வாழ்த்துகள். மக்களுடன் நின்று எனது கூட்டணி ஆட்சி அமையும்." என்றார்.

# சக்தி வாய்ந்த நாடுகளின் பட்டியல் முதலிடத்தை பிடித்த அமெரிக்கா

உலகின் மிகவும் சக்தி வாய்ந்த 20 நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தை பிடித்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் உலகின் மிகவும் சக்திவாய்ந்த 20 நாடுகளின் தரவரிசைப் பட்டியலை Forbes சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

உலகின் சக்திவாய்ந்த நாடுகளுக்கான போட்டி பொருளாதார வலிமை, மக்கள் தொகை மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது.

அந்தவகையில் 1 ஆவது இடத்தில் அமெரிக்காவும், 2 ஆவது இடத்தில் சீனாவும், 3 ஆவது இடத்தில் ஜேர்மனியும், 4 ஆவது இடத்தில் இந்தியாவும் உள்ளன.

5 ஆவது இடத்தில் ஜப்பானும், 6 ஆவது இடத்தில் பிரித்தானியாவும், 7 ஆவது இடத்தில் பிரான்ஸும், 8 ஆவது இடத்தில் இத்தாலியும், 9 ஆவது இடத்தில் கனடாவும், 10 ஆவது இடத்தில் பிரேஸிலும் உள்ளன.

அதேசமயம் 11 ஆவது இடத்தில் ரஸ்யாவும், 12 ஆவது இடத்தில் ஸ்பெயினும்,13 ஆவது இடத்தில் தென் கொரியாவும்,



14 ஆவது இடத்தில் அவுஸ்திரேலியாவும், 15 ஆவது இடத்தில் மெக்ஸிகோவும், 16 ஆவது இடத்தில் துருக்கியும், 17 ஆவது இடத்தில் இந்தோனேஸியாவும், 18 ஆவது இடத்தில் நெதர்லாந்தும், 19 ஆவது இடத்தில் சவூதி அரேபியாவும், 20 ஆவது இடத்தில் போலாந்தும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் தொடரும் கடும் வெப்பம் தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு





ஈரானில் வெப்ப அலை வீசி வரும் நிலையில், முக்கிய நீர்த் தேக்கங்கள் வறண்டு கடும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்காசிய நாடான ஈரானின் பல வேறு பகுதிகளில், வெப்பநிலை 50 டிகிரி செல்ஷியசை தாண்டியுள்ளதாக, அந்நாட்டின் தேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தலைநகர் தெஹ்ரானில் 41 டிகிரி செல்ஷியஸ் வெயில் நேற்று முன்தினம் பதிவானதுடன், இது மேலும் உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ஈரானில்வெப்பஅலைவீசிவருவதால், முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, அந்நாட்டின் தெற்கு பகுதி கடும் வறட்சியைச் சந்தித்துள்ளது.

மேலும், தெஹ்ரானுக்கு நீர் வழங்கும் அணைகள், இந்த நூற்றாண்டிலேயே முதன்முறையாக வறண்டு காணப்படுகின்றன.

இந்த நெருக்கடியைத் தணிக்கும் முயற்சியில், தலைநகரின் சில பகுதிகளில் தண்ணீர் விநியோகத்தை அந்த நாட்டு அரசாங்கம் குறைத்துள்ளது. மேலும், அங்கு 12 முதல் 18 மணி நேரம் வரை தண்ணீர் விநியோகம் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஈரான் முழுதும், தண்ணீரைச் சேமிக்குமாறு மக்களுக்கு அதிகாரிகள் அறிவுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை, தண்ணீர் பற்றாக் குறையைப் போக்க உதவும் வகையில், பயன்பாட்டை 20 சதவீதம் வரை குறைக்கும்படி, தெஹ்ரான் மாகாண நீர் முகாமைத்துவ ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

# ஐ.எம்.எவ். கீதா கோபிநாத் பதவி விலகத் தீர்மானம்

சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மை பிரதி முகாமைத்துவப் பணிப்பாளராகப் பணியாற்றி வரும் கீதா கோபிநாத் பதவி விலகத் தீர்மானித்துள்ளார்.

அவர் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையில் மீண்டும் இணையவுள்ளதுடன், பொருளாதாரத் துறையில் ஆரம்ப கிரிகோரி மற்றும் அனியா காஃபி பொருளாதாரப் பேராசிரியராகப் பணி ஆற்றவுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா நேற்று அறிவித்துள்ளார்.

கோபிநாத் 2019 ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்தில் தலைமைப் பொருளாதார நிபுணராக இணைந்தார்.

கடந்த, ஜூன் மாதம் 15ஆம் மற்றும் 16 ஆம் திகதிகளில் கீதா கோபிநாத் இலங்கைக்குப் பயணம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் -23.07.2025




உங்கள் மனதை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுங்கள். இதனால் மனஅழுத்தத்திலிருந்து விடுபடுவீர்கள்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி இருக்காது. பணிச்சூழல் சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையுடன் தேவையில்லாத விவாதங்களில் ஈடுபடுவீர்கள். அவர் உங்களை தவிர்ப்பது போன்ற உணர்வு உங்களுக்கு ஏற்படும்.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். இன்று பெரிய அளவிலான முதலீட்டுக்கான முடிவுகளை எடுக்க வேண்டாம்.

மன அழுத்தத்தின் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




உங்களை மகிழ்ச்சியுடனும் ஆற்றலுடனும் வைத்துக்கொள்ளுங்கள். அசௌகரியங்கள் காணப்படும். இன்று திருப்தி கிடைப்பது சற்று கடினமாக காணப்படும். அமைதியாக இருங்கள்.

பணியைப் பொறுத்தவரை நீங்கள் ஒரு சிறப்பான வாய்ப்பை இழப்பீர்கள். திறமையுடன் பணியாற்ற நீங்கள் உங்கள் பணிகளை திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையினை சரியான முறையில் அணுகி விஷயங்களை சாதாரணமாக எடுத்துக் கொண்டால் சோர்வு மற்றும் அமைதியின்றி இருப்பதற்கு பதிலாக மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்றைய நிதிநிலை உங்கள் மனஅமைதியை கெடுக்கும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

சளி மற்றும் இருமல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். எனவே ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பது முக்கியம்.




இன்றைய நாள் சீராக இருக்கும். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை மேலதிகாரிகள் தங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு பாராட்டுவார்கள்.

உங்கள் எண்ணங்களையும் கருத்துக்களையும் உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வதற்கு இது ஒரு சாதகமான நாள். உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கான பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்

இன்று நிதிநிலை நன்றாக உள்ளது. நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று நாள் முழுவதும் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். நல்ல தைரியத்துடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் உங்கள் எதிர்காலத்தைப் பற்றி கனவு காண்பீர்கள் மற்றும் சிந்திப்பீர்கள். ஆனால் இன்று நீங்கள் சில முக்கிய நோக்கங்களைக் கொண்டிருப்பீர்கள்.

உங்கள் பணியில் மகிழ்ச்சி நிறைந்த ஆதாயம் காத்துக்கொண்டிருக்கின்றது. உங்களுக்கு கிடைக்கப்பெறும் அங்கீகாரத்தில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் எண்ணங்களையும் கருத்துக்களையும் உங்கள் துணையுடன்பகிர்ந்து கொள்வதற்கு இது ஒரு சாதகமான நாள்.உங்களின் சமநிலையான அணுகுமுறை மூலம் இது சாத்தியம்.

இன்று உங்களுக்கு பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணம் உங்களிடம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.உங்களை திடமாக வைத்துக்கொள்வதற்கான வலிமை உங்களிடம் காணப்படும்.




இன்று மந்தமாக காணப்படுவீர்கள். ஆனால் தேவையான விஷயங்களை செய்வதில் விழிப்புடன் காணப்படுவீர்கள். உங்கள் நாளை கவனமாகத் திட்டமிடுங்கள்.

பணிகளைக் கையாள்வதை சற்று கடினமாக உணர்வீர்கள். பணியில் சில தவறுகளும் நேரலாம்.

உங்கள் மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன தேவையில்லாத விவாதங்களும் தவறான புரிந்துணரவும் காணப்படும்.இம்மாதிரி நிகழ்வுகளை தவிர்ப்பது உங்களுக்கு நல்லது.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாளவும்.

தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. தியானம் செய்வதன் மூலம் மனஅழுத்தத்தைக் குறைக்கலாம்.




மனஅழுத்தம் காரணமாக சில சௌகரியங்களை இழப்பீர்கள். மகிழ்ச்சியுடன்இருக்க பாடல்களைக் கேளுங்கள் அல்லது திரைப்படங்களை பாருங்கள்.

வேலைகள் பெருகிக் காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு அதற்கேற்றவாறு ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையினை சரியான முறையில் அணுகி விஷயங்களை சாதாரணமாக எடுத்துக் கொண்டால் சோர்வு மற்றும் அமைதியின்றி இருப்பதற்கு பதிலாக மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று தேவையான பணம் பெறுவதில் சிக்கல்கள் காணப்படுகின்றது. பணத்தைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்ட வாய்ப்பு கிடையாது.

தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. உங்களை ரிலாக்ஸாக வைத்துக்கொள்ளுங்கள்.




உங்களுடைய அன்றாட பணிகளை அதிர்ஷ்டவசமாக குறித்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். உங்கள் முகத்தில் காணப்படும் உற்சாகம் பல ஆச்சரியங்களை ஏற்படுத்தும்.

உங்கள் பணித் திறமைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியைப் பெற்றுத் தரும்.

உங்கள் துணையுடன் உண்மையாக நடந்து கொள்வீர்கள். இது அவருடனான நல்ல புரிந்துணர்வுக்கு வழிவகுக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். பணத்தை சேமிப்பதற்கான பல வாய்ப்புகள் காணப்படுகின்றன.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் இன்று மகிழ்ச்சியுடன் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




உங்கள் வளர்ச்சி இன்று அபாரமாக இருக்கும். இன்று பரந்த நோக்குடன் காணப்படுவீர்கள்.நீங்கள் சந்திக்கும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் மிகுந்த சிரத்தையுடன் பணியாற்றுவீர்கள். உங்களது இந்தப் போக்கின் காரணமாக பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் விசுவாசமாக இருப்பீர்கள். இது நல்ல உறவை பராமரிக்க உதவும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பை நன்கு பராமரிக்கலாம்.

இன்று ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -23.07.2025




நீங்கள் நிகழ்வுகளை எளிதாக எடுத்துக் கொண்டால் இன்றைய நாள் நன்றாக அமையும். இன்று புதிய மனிதர்களுடன் கலந்துறவாடுவீர்கள். புதிய கூட்டாளிகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை மும்மரமாகச்செய்வீர்கள். பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். நீங்கள் சாமார்த்தியமாக அவற்றைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படவும் விவாதங்கள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

இன்று பண வரவுக்கான அதிர்ஷ்ட வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது.

மனஅழுத்தம் காரணமாக இன்று தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. தூக்கமின்மையினால் அவதிப்படுவீர்கள்.




இன்று மிகவும் சிறப்பான நாள். பயணங்கள் வழியில் சில நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் அந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படலாம்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் பகிர்ந்துகொள்வதற்கு சிறப்பான நாள். உங்கள் துணையுடன் பயனுள்ள திட்டங்கள் பற்றி விவாதிப்பீர்கள்.

சில தடைகளைக் கடந்த பின் உங்களுக்கு பணம் கிடைக்கும். வெளி நாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கும் பணம் உங்களுக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதை தக்க வைத்துக்கொள்ள நீங்கள் குளிர்ச்சியான உணவுப் பொருட்களை தவிர்க்க வேண்டும்.




தேவையற்ற கவலைகள் காரணமாக சில சௌகரியங்களை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பணிச்சுமை கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை நன்றாக திட்டமிட்டு நேராநேரத்தில் அவற்றை முடிக்க வேண்டும்.

உங்கள் மனதில் ஏற்பட்ட ஏமாற்றங்கள் காரணமாக உங்கள் துணையுடன் கடுமையான வார்த்தைகளை பேச நேரிடும். அவ்வாறு பேசுவதை தவிர்க்கவும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படாது. இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

நன்மை தரும் விஷயங்களைப்பற்றி மட்டுமே நினையுங்கள். அது உங்கள் மனதை அனுகூலமாக வைத்திருக்கும்.




இன்றைய நாளின் முடிவில் நீங்கள் கவலையாக காணப்படுவீர்கள். ஆனால் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டு ஆசுவாசத்துடன் இருங்கள்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படுவதால் சிறப்புடன் பணியாற்ற உகந்த நாள் அல்ல. சமயோஜித புத்தியுடன் பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்களிடம் காணப்படும் மன அழுத்தத்தை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதை தவிர்ப்பது உங்களுக்கு நல்லது. நல்லவற்றையே நினையுங்கள்.

இன்று சேமிப்பதற்கு குறைந்த அளவு பணமே கிடைக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலிக்கான வாய்ப்புகள் உள்ளது.

# பிரதி பொலிஸ் மாஅதிபரை கைது செய்ய தீர்மானம் இல்லை

## இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவிப்பு




குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் ரொஹான் பிரேமரத்னவை கைது செய்வதற்கான முயற்சிகள் இல்லையென லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு நேற்று அறிவித்தது.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் நடத்தப்படும் விசாரணைகளுக்கு அமைவாக தாம் கைது செய்யப்படுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதால் அதற்கு முன்னர் தம்மை முன்பிணையில் விடுவிக்குமாறு கோரி ரொஹான் பிரேமரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட முன்பிணை விண்ணப்பம் நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.